1974 ஏப்ரல் 11]

THIRU G. VASANTHA PAI : Sir, the Housing Board accounts, I am told, are not made up after 1965. At least these accounts have gone up to 1972. Will the Government see that they also come to the same level and then put them togather?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அங்கத்தினர் நினைப்பதைப்போல ஹௌசிங் போர்டு மீது குறை சொல்ல முடியாது. அது திறமையாக மக்களுக்குப் பணியாற்றி வருகின்றது. இதை அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள காரணம் அவர்களுக்குத் தேவையான செங்கற்களை அவர்களே செய்து பயன்படுத்திக்கொண்டால் இப்படிப்பட்ட நஷ்டம் இல்லாது இருக்குமோ என்று முடிவெடுத்தது. ஆனால் அதில் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக அவர்களுக்கே பயம் ஏற்பட்டுவிட்டது. பிறகு தொழில் இலாகா நடத்தும் செங்கற் சூளையோடு சேர்த்துவிட வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். இப்போது நாம் உற்பத்தி செய்யும் செங்கல் அவ்வளவையும் அரசாங்கமே வாங்கிக்கொண்டால் பெரும் நஷ்டம் இல்லாத நிலை ஏற்படலாம், விலையைக் குறைத்துச் சொல்ல வேண்டிய நிலையும் இல்லாது இருக்கும் என்று இதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, தனியார் துறையிலுள்ள மற்ற இரண்டு தொழிற்சாலைகளிலே இருக்கும் இயந்திரங்கள் யூகோஸ்லாவியாவிலிருந்து வந்தவைதானா? யூகோ இயந்திரங்கள் தவிர வேறு நாட்டு இயந்திரங்கள் ஏதாவது நமது மாநிலத்தில் இயங்கி வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, வெளிநாட்டு இயந்திரங்கள் எல்லாமே இப்படித்தான் இருக்கின்றன. எந்த நாட்டு இயந்திரம் என்பது முக்கியமில்லை.

Service Clubs

* 313 *Q.*—THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether members of the Judiciary both on the State and District levels can be members of Service Clubs; and

(*b*) if so, whether they can contest for posts in those organisations and canvass for votes?

பணிச் சங்கங்கள்

திரு. எஸ். நாராயணசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் உள்ள நீதிபதிகள் பணிச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கலாமா ?

(இ) ஆம் எனில், அந்த அமைப்புகளில் உள்ள பதவிகளுக்கு அவர்கள் போட்டியிட்டு வாக்குகள் சேகரிக்கலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். பணிச்சங்கங்களின் நோக்கங்கள் அல்லது நடவடிக்கைகள் இந்திய நாட்டு ஒருமைப்பாட்டிற்கோ இறைமைக்கோ அல்லது பொது அமைதிக்கோ அல்லது ஒழுக்கத்திற்கோ பாதகமாக இல்லாவிட்டால் அவர்கள் அப்பணிச் சங்கங்களின் உறுப்பினர் களாக இருக்கலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, do the Government propose to frame any rules regarding the members of the Judiciary contesting for seats in social clubs, because these occurrences have happened and they may reflect on the prestige of the Judiciary? Do the Government consider it desirable that members of the Judiciary should be allowed to contest for positions in these institutions?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, we have consulted the High Court. The High Court has stated that according to rule 21 (b) of the Government Servants Conduct Rules, 1960, no Government servant shall join or continue to be a member of an association, the objects or activities of which are prejudicial to the interest of the sovereignty and integrity of India, public order or morality.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இது முக்கியமான விஷயம் என்று நினைக்கிறேன். காரணம் உயர்நீதி மன்றத்திலுள்ள நீதிபதிகள் சிலர் 'கிளப்' களில் நிர்வாகப் பதவிக்குப் போட்டியிட்டு பிறகு அவர்கள் தோல்வியடைவது அவ்வளவு நல்லதல்ல. அண்மையில்கூட சில தினங்களுக்கு முன்பு அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆகவே அரசாங்கத்திலிருந்து அவர்களுக்கு ஒரு

1974 ஏப்ரல் 11]

வேண்டுகோள் என்ற முறையில், இப்படிப்பட்ட 'கிளப்'களில் அவர்களில் நிர்வாக) பதவிகளுக்குப் போட்டியிடுவது நல்லதில்லை என்று தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அந்த நிர்வாகப் பதவிகளுக்கு மட்டுமில்லை, அதையொட்டி பல்வேறு விஷயங்களையும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கருத்தில் கொண்டுதான் இதைச் சொல்லுகின்றார் என்று நினைக்கிறேன். அவர்களுடைய உணர்வினை இந்த அரசு மதிக்கின்றது. அந்த உணர்வினை அப்படியே உயர் நிதி மன்றத்திற்கு அரசாங்கம் அனுப்பி வைக்கும்.

Bills which are pending assent of the President of India.

*314 Q.—THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the names of Bills as passed by the Tamil Nadu Legislature which are pending with the President of India for signature over six months;

(b) the period for which each such Bill is pending;

(c) the reason for non-signature; and

(d) the action proposed to be taken by the Government in the matter?

இந்தியக் குடியரசுத் தலைவரிடம் ஒப்புதலுக்காக உள்ள சட்ட வரைவுகள்

திரு. எஸ். நாராயணசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு சட்ட மன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காகக் குடியரசுத் தலைவரிடம் ஆறு மாதங்களுக்கு மேலாக இருக்கும் சட்ட வரைவுகள் யாவை?

(இ) அத்தகைய ஒவ்வொரு சட்ட வரைவும் ஒப்புதல் பெற வேண்டியிருக்கும் கால அளவு என்ன?

(உ) ஒப்புதல் அளிக்கப்படாததற்குக் காரணம் என்ன?

(எ) இது குறித்து அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS